வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 31.1.1994 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 4.4.1994 திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 5.4.1994 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 6.4.1994 புதன்கிழமை காலை 10 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. கவன ஈர்ப்பு

(அ) சங்கராபுரம் தொகுதி மூலக்காடு முதல் சேராப்பட்டு வரை பேருந்து இயங்காமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடு) திடீரென்று எழுந்து நிற்கிறீர்களே.

திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன் : 10 ஆயிரம் பேருக்கு மேலே ஸ்ட்ரைக் பண்ணுகிறார்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானமாக மாற்றியிருக்கிறேன் என்றால் கவன ஈர்ப்புத் தீர்மானம் வரிசையாக எடுக்கப்படும். இன்று இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுப்பது என்றால் இன்றைக்கே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அல்ல. அது முறைப்படி சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டு, அவரிடமிருந்து பதில் பெற்று அஜென்டாவில் போட்டு வரும், உட்காருங்கள். திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதி, மூலக்காடு முதல் சேராப்பட்டு வரை செல்லும் பேருந்து ஒரு வருடம், எட்டு மாத காலமாக ஓடாதது குறித்த". அவசரப்

1994 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கள்ளக்குறிச்சி - சேராப்பட்டு வழி, சங்கராபுரம், மூலக்காடு வழித்தடத்தின் தடநீளம் 62 கி.மீ. இவ்வழித்தடத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் புறநகரப் பேருந்துகளை இயக்கி வந்தது. இத்தடத்தில் கள்ளக்குறிச்சியிலிருந்து மூலக்காடு வரை உள்ள பகுதியின் நீளம் 47 கி.மீ. தூரம். இது சமவெளிப்பகுதியாகும். மூலக்காடு முதல் சேராப்பட்டு வரையுள்ள தடப்பகுதியில் நீளம் 15 கி.மீ. கல்வராயன் மலைப்பகுதியில் செல்கின்ற பகுதியாகும். இத்தடப்பகுதியில் மூலக்காடு முதல் சேராப்பட்டு வரை உள்ள மலைப்பகுதி சாலை கடந்த 1992 ஆம் ஆண்டு பெய்த அடைமழையால் பல்வேறு இடங்களில் சாலைத் துண்டிப்பு மற்றும் பக்கச் சுவர்கள் சேதம் ஆகியவற்றால் பேருந்து இயக்கம் மூலக்காட்டுடன் துண்டிக்கப்பட்டது. இதனையொட்டி மேற்படி சாலையில் மீண்டும் பேருந்து வசதி அளித்திட இயலுமா என்பதை உறுதி செய்து கொள்வதற்காக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக, கள்ளக்குறிச்சி கோட்ட மேலாளர் அவர்களால் நேரடி ஆய்வு செய்யப்பட்டது. அவரது ஆய்வின் போது மூலக்காடு - சேராப்பட்டுசாலையில் கீழ்க்கண்ட பகுதிகள் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதல்ல என கண்டறியப்பட்டது:-

1. மூலக்காட்டிலிருந்து 1.2 கி.மீ. தூரத்தில், சாலையின் வலது பக்கம் பெரிய பள்ளம் உள்ளது. மேற்கண்ட இடம் பேருந்து இயக்கத்திற்கு முற்றிலும் ஏற்புடையதல்ல.

2. மூலக்காட்டிலிருந்து 1.6 கி.மீ. தூரத்திலிருந்து 2.6 கி.மீ. தூரம் வரை சாலையின் சரளைக் கற்கள் பெயர்த்து இறைந்துள்ளது. இடது பக்கம் தடுப்புச் சுவர் இல்லை.

3. மூலக்காட்டிலிருந்து 2.3 கி.மீ. தூரத்திலிருந்து 4.3 கி.மீ. வரை ஜல்லிகள் பரப்பப்பட்டு மணல் கொட்டி ரோலர் ஓட்டப் பட்டுள்ளது.

4. மூலக்காட்டிலிருந்து 2.3 கி.மீ. இருந்து 2.9 கி.மீ. வரை உள்ள மலைப்பாதையின் இடது பக்கம் தடுப்புச் சுவர் இல்லை. சாலையின் அகலமும் குறைவாக உள்ளது. தடுப்புச் சுவர் இல்லாததால் பேருந்து இயக்கம் மிகவும் ஆபத்தானது.

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1994 மார்ச் 28

5. மூலக்காட்டிலிருந்து 3.5 கி.மீ. தூரத்தில் உள்ள மலைப்பாதையின் வலதுபக்கம் பெரிய பாறை எப்பொழுதும் சாயக்கூடிய நிலையில் உள்ளது.

6. மூலக்காட்டிலிருந்து 4. கி.மீ. தூரத்தில் சாலையின் இடதுபக்கம் பெரிய பள்ளம் உள்ளது. பள்ளத்தின் அளவு ஆழம் 4 அடி, அகலம் 4 அடி, நீளம் 4 அடி ஆகும். சாலையின் அகலம் மிகவும் குறைவு. அதில் இடது பக்கத்தில் பெரிய பள்ளம் உள்ளதால் இடைப்பட்ட சாலை அகலத்தில் ஜீப் மட்டும்தான் செல்ல முடியும்.

7. மூலக்காட்டிலிருந்து 4 கி.மீ. தூரத்திலிருந்து 5 கி.மீ. வரை தார் ரோடு நல்ல நிலையில் உள்ளது.

8. மூலக்காட்டிலிருந்து வஞ்சிக்குழி வரை உள்ள 7 கி.மீ. தூரத்தில் இரண்டு இடங்களில் சாலையில் பெரிய பள்ளம் உள்ளது. தடுப்புச் சுவர் விட்டு விட்டு இல்லாமல் உள்ளது. இந்த இரண்டு பள்ளங்களும் சரி செய்யப்பட வேண்டும்.

9. வஞ்சிக்குழியிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் மெட்டல் ரோடு ஆரம்பமாகி 2 கி.மீ. தூரம் வரை மெட்டல் ரோடு சேதமடைந்துள்ளது.

எனவே மூலக்காட்டிலிருந்து வஞ்சிக்குழி வரையிலான சாலையில் உள்ள குறைபாடுகள் மலைப்பகுதியில் உள்ளதால் பயணிகள் பாதுகாப்புக் கருதி பேருந்து இயக்க இயலாத சூழ்நிலையைக் குறிப்பிட்டு சாலையை செப்பனிட்டுத்தர நெடுஞ்சாலைத் துறையினரைப் பணித்திடுமாறு விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டதன்பேரில், மேற்படி சாலையின் உண்மை நிலையை அறிய மாவட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலர், நெடுஞ்சாலைத்துறை உதவிப் பொறியாளர், சங்கராபுரம் மற்றும் கோட்ட மேலாளர், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஆகியோர் அடங்கிய குழு 10.3.94 அன்று மூலக்காடு–சேராப்பட்டுசாலையை கூட்டாய்வு செய்தது. அவ்வாய்வின் போது மூலக்காட்டிலிருந்து வஞ்சிக்குழி வரையுள்ள 10 கி.மீ. தூரத்தில் சாலையின் இருபுறமுள்ள நான்கு இடங்களில் உள்ள பள்ளங்களையும் தடுப்புச் சுவர் இல்லாத இடங்களையும் சரி செய்து தருமாறு நெடுஞ்சாலைத்துறை பொறியாளரிடம் விழுப்புரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் கேட்டுக் கொண்டார்.

பின்னர் மேற்படி சாலை சரி செய்யப்பட்டுவிட்டதாக சங்கராபுரம் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் தெரிவித்ததின் பேரில், 17.3.94 அன்று தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக கோட்ட மேலாளரும் நெடுஞ்சாலைத்துறை பொறியாளரும் ஆய்வு செய்து மேற்படி சாலையில்

1994 மார்ச் 28] [திரு. கே. ஏ. செங்கோட்டையன்]

உள்ள பழுதுகள் தற்காலிகமாக நிவர்த்தி செய்யப்பட்டு பகல் நேரத்தில் மட்டும் பேருந்து இயக்கலாம் என அவர்களுடைய ஆய்வறிக்கையை 18-3-1994 அன்று அளித்துள்ளார்கள்.

இதன் பேரில் 21-3-94 முதல் பகல் நேரத்தில் மட்டும் மேற்படி கள்ளக்குறிச்சி - சேராப்பட்டு, வழி : மூலக்காடு தடத்தில் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 21-3-1994 முதல் ஒரு பேருந்து விடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மேற்படி பேருந்தும் மூலக்காட்டிலிருந்து வஞ்சிக்குழி வரை மட்டுமே ஓடுவதாகக் கூறப்பட்டுள்ளது. வஞ்சிக்குழியிலிருந்து சேராப்பட்டு 15 கிலோமீட்டர் தூர இடைவெளியில் உள்ளது. வஞ்சிக்குழி என்பது மலை அடிவாரத்தில் உள்ள ஒரு கிராமம் ஆகும். எனவே, மலைவாழ் மக்கள் அனைவரும் வஞ்சிக்குழிக்கு மேலே சேராப்பட்டு பகுதியிலே தான் அதிகமாக வசிக்கின்றார்கள். எனவே, அந்த மலைவாழ் மக்கள் நலன் கருதி வஞ்சிக்குழி பேருந்தை சேராப்பட்டு வரை செல்லும் வகையில் பஸ் விடவும், ஒரு பஸ் போதாது இரண்டு, 3 பஸ்களையாவது விட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளை இயக்க முடியாத அளவுக்கு அங்கே இருக்கின்ற தடுப்புச் சுவர்கள், ஏற்பட்ட மழை வெள்ளத்தின் காரணமாக சரிந்து விழுந்திருக்கிறது. பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலே தான் பகல் நேரங்களில் அந்தப் பகுதிகளுக்கு நாங்கள் பேருந்துகளை இயக்குகிறோம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுப் பணித் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் இருக்கின்ற போக்குவரத்துத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஒன்றாகச் சேர்ந்து அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டதற்குப் பிறகு பகல் நேரங்களில் மட்டும் தான் அந்தப் பேருந்துகளை இயக்க முடியும். அதுவும் சரிவான பகுதியாக இருக்கிறது. தடுப்புச் சுவர்கள் இல்லாத காரணத்தாலேதான் இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருவார்களேயானால், அந்தப் பாதையைச் சீரமைத்த உடனேயே, நீங்கள் எவ்வளவு பேருந்துகள் தேவை என்று சொல்லுகிறீர்களோ அவ்வளவு பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21.3.1994 முதல் பேருந்து இயக்கப்படுவதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

21.3.1994 அன்று ஒரு பேருந்தை அனுப்பினார்கள். போகும் வழியிலேயே, பாதி வழியிலேயே அந்தப் பேருந்து பஞ்சராகி நின்றுவிட்டது. முதல் நாளே, பயணிகள் அங்கேயிருந்து திரும்ப நடந்து சென்றார்கள். அதற்குப் பிறகும் அந்தப் பேருந்து அடிக்கடி ரிப்பேராகி இருக்கிறது. அது கண்டம்ட் பஸ்ஸாகத் தெரிகிறது. எனவே வேறு ஒரு நல்ல பேருந்தினைவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சராவது என்பது ஏற்படுகிற நிகழ்ச்சிதான். உங்களுடைய கார்கூட பஞ்சராகிவிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறந்த பேருந்துகள் விட வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். உடனடியாக இந்தத் துறைக்கு அறிவுரை வழங்கப்படும். சிறப்பான பேருந்துகளைத்தான் நாம் இயக்குகிறோம். சாலை பழுது பார்க்கப்பட்டால் சிறப்பான பேருந்துகள் அங்கே இயக்கப்படும்.

(ஆ) வெள்ளத்தால் பழுதடைந்த ஆண்டிமடம் தொகுதி, அரியலூர் - செந்துறை சாலை செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். தங்கராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. ஆர். தங்கராஜ்.

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெள்ளத்தால் பழுதடைந்த ஆண்டிமடம் தொகுதி, அரியலூர் - செந்துறை சாலை செப்பனிடப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் அரியலூர் - செந்துறை சாலை என்பதாகும். இச்சாலை *20.60* கி.மீ. *(0/0/-20/6)* நீளமுடைய ஓர் இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில், *1992-93* ஆம் ஆண்டிற்கான "தொழிற்சாலை அல்லாத பகுதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை சீர் செய்யும் திட்டத்தின் கீழ்" அனுமதி